Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 213 | உள்ளூர் - 01.08.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 213 | வெளியூர் - 02.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**ஆகஸ்ட் கிரகணங்கள்: 12 ராசிகளுக்கு என்ன பலன்?**

**தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி (TMB) வேலைவாய்ப்பு!**

**காவல் நிலையத்தில் செந்தில் பாலாஜி நேரில்!**

**தோப்பு வெங்கடாசலம் பதவியை பறித்த திமுக!**

## பிரிக்ஸ் ... டெல்லியில் கூடும் உலக சக்திகள்!




புதுடெல்லி, ஆக. 01–

டெல்லியில் செப்டம்பர் 12 மற்றும் 13–ஆம் தேதிகளில் நடைபெற உள்ள பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க சீன அதிபர் ஸீ ஜின்பிங் இந்தியா வர வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த பயணம் உறுதியானால், 2020–ம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கு மோதலுக்குப் பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் இந்திய பயணமாக அமையும். இதன் மூலம் இந்தியா–சீனா உறவில் புதிய முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஸீ ஜின்பிங் இடையே உயர்மட்ட பேச்சுவார்த்தை நடைபெறவும் வாய்ப்புள்ளது.

எல்லை பிரச்சினைகள், இருதரப்பு வர்த்தகம், முதலீடு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய அரசியல் விவகாரங்கள் குறித்து முக்கிய ஆலோசனைகள் நடைபெறலாம் என கூறப்படுகிறது. உலக பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பிரிக்ஸ் அமைப்புக்கு இந்த மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இருப்பினும், ஸீ ஜின்பிங்கின் இந்திய பயணம் குறித்து சீனா அல்லது இந்திய அரசு இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடவில்லை. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்களும் மாநாட்டில் பங்கேற்க வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எஸ்சிஓ மாநாடு: பிரதமர் மோடிக்கு பாகிஸ்தான் அழைப்பு!




புதுடெல்லி, ஆக. 01–

2027–ம் ஆண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) உச்சி மாநாட்டை நடத்தும் பொறுப்பை பாகிஸ்தான் பெற்றுள்ளது. அமைப்பின் நடைமுறையின்படி, இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அனைத்து உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கும் பாகிஸ்தான் அழைப்பிதழ் அனுப்ப உள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்பது குறித்து, அழைப்பிதழ் கிடைத்த பிறகே இந்தியா முடிவு எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ரூ. 5,000 கோடியில் விமான நிலையத்தை திறந்து வைத்த பிரதமர்!



ஆந்திர பிரதேசம், ஆக. 01–

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, அந்த மாநிலங்க ளுக்குச் சென்றுள்ளார். அங்கு கலை நிகழ்ச்சிகளுடன் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்த வகையில், விஜய நகரம் மாவட்டம் போகபுரத்தில் உள்ள அல்லூரி சீதாராம ராஜு சர்வ தேச விமான நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

ஆந்திரப் பிரதேச முதல்வர் என். சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் மற்றும் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கே. ராம் மோகன் நாயுடு ஆகியோர் இந்த நிகழ்வில் உடனிருந்தனர்.

முதல் கட்டமாக ஆண்டுக்கு அறுபது லட்சம் பயணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த விமான நிலையம், வரும் காலங்களில் ஆண்டுக்கு 4 கோடி பயணிகள் பயன்படுத்தும் வகையில் விரிவுபடுத்தும் திட்டத்தைக் கொண்டுள்ளது.

மேலும், சுமார் ரூ. 18,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி, அவற்றை தொடங்கி வைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முதல்வர் விஜய்க்கு புதிய அலுவலகம்!





சென்னை, ஆக. 01–

தமிழக முதல்வர் விஜய்க்காக தலைமைச்செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10–வது தளத்தில் புதிய அலுவலகம் அமைக்க ரூ.11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 60 ஆண்டுகளுக்கும் மேலாக செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வந்த முதல்வர் அலுவலகம், இடவசதி குறைவு காரணமாக மாற்றப்பட உள்ளது. புதிய அலுவலகத்தில் முதல்வர் அறை, செயலாளர்கள் அலுவலகம், கூட்ட அரங்குகள், காத்திருப்பு அறைகள் மற்றும் உணவக வசதி உள்ளிட்ட நவீன அம்சங்கள் இடம்பெற உள்ளன. தொடக்கப் பணிகளுக்காக ரூ.7.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், ஆறு மாதங்கள் என திட்டமிடப்பட்ட பணிகளை மூன்று மாதங்களுக்குள் முடிக்கமுதல்வர் அலுவலகம் உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## ராகுல் தமிழகம் வருகை!



சென்னை, ஆக. 01–

சென்னை மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் பயிற்சி முகாம் நிறைவு விழாவில் பங்கேற்பதற்காக சென்னை வந்த ராகுல் காந்திக்கு சென்னை விமான நிலையத்தில் காங்கிரஸ் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். சென்னை விமான நிலையத்துக்கு காலை 10 மணிக்கு வருகை தந்த ராகுல்காந்தி, 11.30 மணிக்கு சாலை வழியில் மாமல்லபுரம் வந்தடைகிறார். அங்கு காங்கிரஸ் சார்பில் நடைபெறும் பயிற்சி முகாம் நிறைவு நாள் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி இன்று (ஆக.1) தமிழகம் வந்துள்ளார். சென்னை அருகே மாமல்லபுரத்தில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர்களுக்கான பயிற்சி முகாமில் பங்கேற்று உரையாற்றும் அவர், தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் மூத்த தலைவர்களை சந்தித்தும் பேசவிருக்கிறார்.

இன்று மாமல்லபுரத்தில் நடைபெறும் பயிற்சி முகாமில் தமிழகத்தின் 74 மாவட்ட காங்கிரஸ் தலைவருடனும் ராகுல் காந்தி கலந்துரையாடவுள்ளார். அப்போது அரசியல் வியூகங்கள், கட்சியின் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளது என்று காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கம் வாங்க இதுதான் நேரமா? அமெரிக்க சந்தையில் அதிர்ச்சி வீழ்ச்சி!!




சென்னை, ஆக. 01–

சர்வதேச சந்தையில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தால் தங்கம் விலையில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க சந்தையில் ஒரே நாளில் 1.48 சதவீதம் வரை தங்கம் விலை வீழ்ச்சியடைந்தது முதலீட்டாளர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

அமெரிக்க பெடரல் ரிசர்வ் வட்டி கொள்கை குறித்த எதிர்பார்ப்புகள், 10 ஆண்டு அரசு பத்திரங்களின் வட்டி வருமானம் உயர்ந்தது மற்றும் முதலீடுகள் பாதுகாப்பான பத்திரச் சந்தைக்கு மாறியது ஆகியவை தங்கத்தின் மீதான முதலீட்டை குறைத்ததாக சந்தை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக, சர்வதேச ஸ்பாட் சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 4,042.67 டாலராக சரிந்தது.

இந்த சரிவின் தாக்கம் இந்திய சந்தையிலும் எதிரொலித்துள்ளது. சென்னை சில்லறை சந்தையில் 22 கேரட் தங்கத்தின் விலை ஒரு கிராமுக்கு ரூ.35 குறைந்து ரூ.13,220 ஆக விற்பனையாகிறது. அதே நேரத்தில், வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.235 என்ற விலையே தொடர்ந்து நான்காவது நாளாக நீடிக்கிறது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க வட்டி விகித முடிவுகள் மற்றும் உலக சந்தை நிலவரத்தைப் பொறுத்தே அடுத்தகட்டத்தில் தங்கம் விலை நகரும் என நிபுணர்கள் கருதுகின்றனர். தொடர்ந்து விலை குறையும் நிலை நீடிக்குமா அல்லது மீண்டும் உயருமா என்பது முதலீட்டாளர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## டெல்லியில் ஆகஸ்ட் 16 வரை டிரோன்கள் பறக்கத் தடை!



புதுடெல்லி, ஆக. 01–

நாட்டின் 78–வது சுதந்திர தினவிழா வரும் 15 அன்று தலைநகர் டெல்லி செங்கோட்டையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார். இதனை முன்னிட்டு அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு டெல்லி முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக, தேசிய தலைநகர் பகுதியில் வான்வழி மூலம் நிகழக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தவிர்க்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நாளை முதல் 16ஆம் தேதி வரை டிரோன்கள் மற்றும் சிறிய ரக வான்வழி சாதனங்களைப் பறக்கவிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை ஆணையர் உத்தரவு:

டெல்லி காவல்துறை ஆணையர் அனுராக் குமார், புதிய குற்றவியல் சட்டமான 'பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா' (BNSS), 2023 சட்டப் பிரிவு 163–ன் கீழ் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த கட்டுப்பாடுகள் ஆகஸ்ட் 16 ஆம் தேதி நள்ளிரவு வரை அமலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட சாதனங்கள்:

* ட்ரோன்கள் மற்றும் ட்ரோன் கேமராக்கள்
* ட்ரோன் அல்லாத வான்வழி வாகனங்கள்
* குவாட்காப்டர்கள்
* பாராகிளைடர்கள் மற்றும் பாரா–மோட்டார்கள்
* ஹேங் கிளைடர்கள் மற்றும் மைக்ரோலைட் விமானங்கள்
* ஹாட்டேர் பலூன்கள்
* பாரசூட் குதித்தல்

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணம்:

சமூக விரோதிகள் அல்லது தீவிரவாத அமைப்புகள் இதுபோன்ற வான்வழி சாதனங்களைப் பயன்படுத்தி முக்கியத் தலைவர்கள், பொதுமக்கள் மற்றும் முக்கியமான அரசு தலைமை அலுவலகங்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடும் என்ற உளவுத்துறை எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்தத் தடை அமல்படுத்தப்பட்டுள்ளது.

மீறினால் கடுமையான நடவடிக்கை:

இந்த தடை உத்தரவை மீறி யாரேனும் டிரோன்கள் அல்லது பிற சாதனங்களைப் பறக்கவிட்டால், அவர்கள் மீது 'பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டப் பிரிவு 223–ன் கீழ்' கடுமையான குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட சாதனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் டெல்லி காவல்துறை எச்சரித்துள்ளது.

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட முடியுமா? முடியாதா? மு.க. ஸ்டாலின்!



சென்னை, ஆக. 01–

மேக்கேதாட்டு அணை விவகாரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டக் கோரி, முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது, "தனி ஆவர்த்தனம் செய்ய நினைத்துத் தனிமைப்பட்டு நிற்கிறார் முதல்வர்.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், விவசாயிகள் சங்கத்தினர் எல்லோரும் மேக்கேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது பயனளி க்காது என்று எச்சரித்தோம். கர்நாடகம் செல்ல வேண்டாம் என்று தமிழ்நாடு முதல்வருக்குக் கோரிக்கை வைத்தோம்.

தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தரமுடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்ட மாநிலத்துடன் சட்டரீதியாகத்தான் போராட வேண்டும் என்பதே கடந்த காலத்தில் நாம் பெற்ற படிப்பினை. உபரிநீரை வெளியேற்றும் வடிகால் பகுதியாகத்தான் தமிழ்நாட்டைப் பார்க்கிறார்கள். ஆனால், தான் கர்நாடகம் சென்றால் காவிரியைக் கையோடு எடுத்துவந்து விடலாம் என்று தமிழ்நாட்டின் புதிய முதல்வர் நினை த்தாரோ என்னவோ... நமது எச்சரி க்கைகளை மீறி கர்நாடகம் செல்வதற்குத் தூது அனுப்பினார். தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடச் சொல்லி காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டதும் "நீங்கள் இப்போதைக்கு வரவேண்டாம்" என்று கேட்டைச் சாத்திவிட்டார்கள்.

இதுபோன்ற சூழ்நிலைகளை முன்பே கணித்துதான், தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் எச்சரித்தோம். இனியேனும் தமிழ்நாட்டின் உயிர்ப் பிரச்னையான காவிரி விவகாரத்தை முதல்வர் ஆலோசனைகளோடு அணுக வேண்டும்.

நமது முதல்வரை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு, கர்நாடகத்தில் ஆகஸ்ட் 2 –ல் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அம்மாநில முதல்வர் அழைப்பு விடுத்து அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதைத் தனது செயலால் உணர்த்திவிட்டார். அனை த்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது எப்போது? முடியுமா முடியாதா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 01.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 16-ம் தேதி

# ரூபாய் சரிவு... இந்தியாவுக்கு லாபம் ?




கடந்த ஒன்றரை ஆண்டுகளில் அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு கணிசமாக சரிந்ததால், முன்பு 'Overvalued' (அதிக மதிப்பீடு) நாணயமாக இருந்த ரூபாய், தற்போது 'Undervalued' (குறைவாக மதிப்பிடப்பட்ட) நாணயமாக மாறியுள்ளது. இதனால் இந்திய ஏற்றுமதி, உள்நாட்டு உற்பத்தி மற்றும் உலக சந்தையில் இந்தியாவின் போட்டித்திறன் அதிகரிக்கும்,

அமெரிக்கா-ஈரான் பதற்றம் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்தபோது, ரூபாய் மதிப்பு ஒரு டாலருக்கு ரூ.96.96 வரை சரிந்தது. பின்னர் கச்சா எண்ணெய் விலை குறைந்ததைத் தொடர்ந்து ரூபாய் சுமார் ரூ.95.9 என்ற அளவில் நிலைத்துள்ளது.

ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா, வெளிப்புற பொருளாதார அழுத்தங்கள் குறைந்தால் ரூபாய் மீண்டும் வலுப்பெற வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார். தற்போது ரூபாயின் REER (Real Effective Exchange Rate) குறியீடு 100–க்கும் கீழ் இருப்பதால், இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்கள் வெளிநாடுகளில் மலிவாக கிடைக்க வாய்ப்பு உருவாகியுள்ளது. இதன் மூலம் ஏற்றுமதி வளர்ச்சி, உள்நாட்டு தொழில்துறைக்கு ஊக்கம் மற்றும் இறக்குமதி பொருட்களுடன் இந்திய நிறுவனங்கள் எளிதாக போட்டியிடும் சூழல் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சமீபத்திய தரவுகளின்படி இந்திய ரூபாய், சீன யுவானைவிடவும் அதிக போட்டித்திறன் கொண்ட நாணயமாகமாறியுள்ளது. இருப்பினும், மேற்கு ஆசிய நிலைமை, கச்சா எண்ணெய் விலை மற்றும் உலக வர்த்தகச் சூழலைப் பொறுத்தே ரூபாயின் அடுத்தகட்ட மதிப்பு மற்றும் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி அமையும்.

# 8-வது ஊதியக்குழு: அரசு ஊழியர்களுக்கு சம்பள ஜாக்பாட்?



புதுடெல்லி, ஆக.01–

8–வது ஊதியக் குழுவில் 2.57 ஃபிட்மென்ட் காரணி அமல்படுத்தப்பட்டால், மத்திய அரசு ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் கணிசமான உயர்வு ஏற்படும் என எதிர்பார்க்கப்படு கிறது.

Level–1 பணியாளர்களின் அடிப்படை ஊதியம் ₹18,000–ல் இருந்து ₹46,260 ஆக உயர வாய்ப்பு.

Level–7 ஆசிரியர்களின் அடிப்படை ஊதியம் ₹44,900–ல் இருந்து ₹1.15 லட்சம் வரை உயரலாம்.

Level–10 அதிகாரிகளின் அடிப்படை ஊதியம் ₹56,100–ல் இருந்து ₹1.44 லட்சம் வரை அதிகரிக்கக்கூடும்.

புதிய ஊதியத்துடன் HRA, TA உள்ளிட்ட படிகளும் மறுகணக்கீடு செய்யப்படும்.

20%30% வரை நிகர சம்பள உயர்வு கிடைக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

குறிப்பு: இவை அனைத்தும் 8–வது ஊதியக் குழுவின் அதிகாரப்பூர்வ பரிந்துரைகள் வெளியாகும் வரை எதிர்பார்ப்பு மட்டுமே.

# நிறை புத்தரிசி பூஜை: திறக்கிறது சபரிமலை நடை!



திருவனந்தபுரம், ஆக. 01–

விவசாயம் செழிக்க வேண்டி நடைபெறும் நிறை புத்தரிசி வழிபாட்டை முன்னிட்டு, சபரிமலை ஐயப்பன் கோயில் நடை நாளை (ஆக.2) மாலை திறக்கப்படுகிறது.

பாலக்காடு, ஆரன்முலா, செட்டிகுளங்கரா மற்றும் தென்காசி பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல், பாரம்பரிய ஊர்வலமாக ஆக.3–ம் தேதி சபரிமலைக்கு கொண்டு வரப்பட்டு கருவறையில் சமர்ப்பிக்கப்படும். பின்னர் வழிபாடு நடைபெற்று, நெல்மணிகள் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டு, அன்று இரவு கோயில் நடை சாத்தப்படும்.

# ஐரோப்பாவை குறிவைக்கும் அதானி... பிரிட்டன் அடுத்து இத்தாலி?




புதுடெல்லி, ஆக. 01–

உலகளாவிய உள்கட்டமைப்பு விரிவாக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள அதானி குழுமம், பிரிட்டனின் முன்னணி துறைமுக நிறுவனத்தில் முதலீடு செய்யும் முயற்சியைத் தொடர்ந்து, தற்போது இத்தாலியின் Catania விமான நிலையத்தை வாங்கும் போட்டியிலும் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது.

இத்தாலியின் 5–வது பெரிய விமான நிலையமான Catania Airport–ஐ தனியார்மயமாக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கு தேர்வான 10 நிறுவனங்களில் Adani Airport Holdings நிறுவனமும் இடம்பெற்றுள்ளது. சுமார் 500600 மில்லியன் டாலர் மதிப்புள்ள 51% பங்குகளை விற்பனை செய்யும் திட்டம் நடைபெற்று வரும் நிலையில், அதானியின் ஐரோப்பிய விரிவாக்கம் மேலும் வேகமெடுத்துள்ளது.

# 5 தொகுதி இடைத்தேர்தல்: ஆக.24 வரை தடை நீட்டிப்பு!



சென்னை, ஆக. 01–

திருச்சி கிழக்கு, விராலி மலை, கரூர், பெருந்துறை மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிப்பை வெளியிட விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை ஆகஸ்ட் 24 வரைசென்னை உயர்நீதிமன்றம் நீட்டித்துள்ளது.

இந்த 5 தொகுதிகளின் தேர்தல் வெற்றியை எதிர்த்து வழக்குகள் நிலுவையில் உள்ளதால், இடைத்தேர்தல் அறிவிப்புக்கு தடை கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்றம், தடையை தொடர்ந்ததுடன் வழக்கின் அடுத்த விசாரணையை ஆகஸ்ட் 24–க்கு ஒத்திவைத்தது.

# திருப்பரங்குன்றம் தீபம் வழக்கு: ஆக.3-ல் உச்ச நீதிமன்றம் விசாரணை!




மதுரை, ஆக. 01–

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் ஆண்டுதோறும் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு, ஆகஸ்ட் 3–ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. இதுதொடர்பாக கோயில் நிர்வாகம் மற்றும் மனுதாரர் தரப்பிலும் தனித்தனி மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்கை நீதிபதிகள் அரவிந்த் குமார் மற்றும் விபுல் எம். பஞ்சோலி அமர்வு விசாரிக்க உள்ளது.

# விவசாயிகளுக்கு குட்நியூஸ்... PM கிசான் மேலும் 5 ஆண்டுகள் நீட்டிப்பு!



புதுடெல்லி, ஆக. 01–

விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6,000 வழங்கும் பிரதமர் கிசான் (PM–Kisan) திட்டம் 2026–27 முதல் 2030–31 வரை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக ரூ.3.15 லட்சம் கோடிநிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2019–ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் இதுவரை 23 தவணைகளில் ரூ.4.47 லட்சம் கோடிக்கும் மேல்விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ரூ.6,000 மூன்று தவணைகளாக வழங்கப்படும் இந்தத் திட்டம், கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு தொடர்ந்து நிதி ஆதரவாக இருக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# பொதுமக்கள் மனுக்கள்: 30 நாட்களுக்குள் தீர்வு கட்டாயம்!





சென்னை, ஆக. 01–

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் எந்த மனுவும் 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் இருக்கக் கூடாது என அனைத்து துறை செயலர்கள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மனுக்களின் தீர்வு நிலையை துறைத் தலைவர்கள் வாரந்தோறும் ஆய்வு செய்யவும், மாவட்டங்களில் மாதந்தோறும் கள ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், துறை சார்ந்த முக்கிய விவரங்களை அமைச்சர்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கவும், அரசாணைகளை தாமதமின்றி இணையதளங்களில் பதிவேற்றவும், மத்திய அரசின் மானியங்கள் மற்றும் நிலுவைத் தொகைகளை விரைந்து பெற நடவடிக்கை எடுக்கவும் தலைமைச் செயலர் சாய்குமார் தலைமையிலான ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

# பக்தர்கள் VS விஜபி... மீனாட்சி கோயிலில் பரபரப்பு!





மதுரை, ஆக. 01–

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில், அம்மன் சந்நிதி அருகே செயல்பட்டு வரும் பொருட்கள் மற்றும் காலணி காப்பகத்தை தெற்கு சித்திரை வீதிக்கு மாற்றும் நடவடிக்கைக்கு பக்தர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

உயர் நீதிமன்ற உத்தரவின்படி கோயிலுக்குள் செல்போன் உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதால், பக்தர்களின் வசதிக்காக நான்கு சித்திரை வீதிகளிலும் பொருட்கள் மற்றும் காலணி காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், கிழக்கு சித்திரை வீதியில் உள்ள காப்பகமே அதிகளவில் பக்தர்கள் பயன்படுத்தும் இடமாக உள்ளது.

அம்மன் சந்நிதி நுழைவுவாயில் அருகே உள்ள இந்த காப்பகத்திற்கு வரும் பக்தர்கள் கூட்டம், விஜபிகள் வருகையின்போது பாதுகாப்பு மற்றும் போக்குவரத்தில் இடையூறாக இருப்பதாக போலீஸார் தெரிவித்ததை யடுத்து, அந்த காப்பகத்தை தெற்கு சித்திரை வீதிக்கு மாற்ற கோயில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக அங்கு புதிய காப்பக கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பக்தர்கள், அம்மனும் சுவாமியும் கிழக்கு நோக்கியிருப்பதால் பெரும்பாலானோர் கிழக்கு வாசல் மற்றும் அம்மன் சந்நிதி வழியாகவே தரிசனத்திற்கு செல்வதாக கூறுகின்றனர். காப்பகத்தை தெற்கு சித்திரை வீதிக்கு மாற்றினால், காலணிகளை ஒப்படைத்த பிறகு பக்தர்கள் வெறுங்கால்களுடன் நீண்ட தூரம் நடக்க வேண்டிய சிரமம் ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நடவடிக்கை அம்மன் சந்நிதி நுழைவுவாயிலை விஜபிகளுக்காக மட்டுமே பயன்படுத்தும் நிலையை உருவாக்கும் என்ற அச்சத்தையும் பக்தர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். கூட்ட நெரிசலைத் தவிர்க்க வேண்டுமெனில், விஜபிகளை வடக்கு வாசல் போன்ற மாற்று நுழைவுவழி மூலம் அழைத்துச் செல்லலாம் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.


எனவே, பொதுப் பக்தர்களின் வசதியை கருத்தில் கொண்டு, தற்போது செயல்பட்டு வரும் பொருட்கள் மற்றும் காலணி காப்பகத்தை அதே இடத்தில் தொடரச் செய்ய வேண்டும் என கோயில் நிர்வாகத்துக்கும், காவல் துறைக்கும் பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும். உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர்.

இந்நிலையில், அம்மன் சந்நிதி அருகே செயல்பட்டு வரும் பொருட்கள் மற்றும் காலணி காப்பகத்தை மாற்றும் நடவடிக்கை குறித்து, மாற்றுத்திறனாளிகள், முதியோர் (Senior Citizens) உள்ளிட்டோரின் சிரமம் கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும், பொதுமக்கள் அல்லது பக்தர்களிடம் எந்தவித கருத்துக்கேட்பும் நடத்தாமல் நிர்வாகம் ஒருதலைப்பட்சமாக செயல்படுகிறதா? என்ற கேள்வியை சமூக ஆர்வலர்கள் எழுப்பியுள்ளனர்.

பக்தர்களின் தரிசனத்தில் எந்தவித பாகுபாடும் இருக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வரும் சூழலில், முக்கியஸ்தர்களின் வருகையை முன்னிறுத்தி பொதுப் பக்தர்களுக்கு சிரமம் ஏற்படும் வகையிலான நடவடிக்கைகள் வருத்தமளிப்பதாக அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து தமிழக முதல்வரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



# ஆகஸ்ட் கிரகணங்கள்: 12 ராசிகளுக்கு என்ன பலன்?



2026 ஆகஸ்டில் ஆகஸ்ட் 12–ம் தேதி முழு சூரிய கிரகணமும், ஆகஸ்ட் 28–ம் தேதி பகுதி சந்திர கிரகணமும் நிகழ்கின்றன. இந்த இரு கிரகணங்களும் இந்தியாவில் தெரியாததால் சூதக காலம் பொருந்தாது. இருப்பினும் ஜோதிட ரீதியாக 12 ராசிகளின் வேலை, தொழில், நிதி மற்றும் குடும்ப வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்படலாம் என கூறப்படுகிறது.

**ராசி பலன்கள் சுருக்கமாக:**

**மேஷம்:** பணிச்சுமை, பொறுப்புகள் அதிகரிக்கும்; முதலீட்டில் கவனம்.

**ரிஷபம்:** நிதி விஷயங்களில் எச்சரிக்கை; அவசர முடிவுகளை தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய வாய்ப்புகள் கிடைக்கும்; செலவுகளை கட்டுப்படுத்தவும்.

**கடகம்:** குடும்ப பொறுப்புகள் உயரும்; திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**சிம்மம்:** தொழில் முன்னேற்றம், புதிய பொறுப்புகள்; அவசரம் வேண்டாம்.

**கன்னி:** பணிச்சுமை அதிகரிக்கும்; வாக்குவாதங்களை தவிர்க்கவும்.

**துலாம்:** புதிய அறிமுகங்கள், தொழில் வளர்ச்சி, நிதி ஆதாயம்.

**விருச்சிகம்:** தொழில் முன்னேற்றம்; முதலீட்டில் நிதானம் அவசியம்.

**தனுசு:** புதிய வேலை, தொழில் மாற்றங்கள்; திட்டமிட்டு செயல்படுங்கள்.

**மகரம்:** பதவி, பொறுப்புகள் உயரும்; நிதிநிலை மேம்படும்.

**கும்பம்:** புதிய தொழில் வாய்ப்புகள், கூட்டணிகள் உருவாகும்.

**மீனம்:** குடும்பம், நிதி விஷயங்களில் கூடுதல் கவனம்; செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது.

# இந்தியாவின் 'நேவிக்' அமைப்பில் புதிய சவால்... மத்திய அரசு!



புதுடெல்லி, அக்,.01–

இஸ்ரோவின் நேவிக் (NavIC) செயற்கைக்கோள் அமைப்பால் தற்போது தனித்து இருப்பிட (Navigation) சேவையை வழங்க முடியாது என்று மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. மார்ச் 2016–ல் ஏவப்பட்ட ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்–1எஃப் செயற்கைக்கோள் தனது திட்டமிட்ட 10 ஆண்டு ஆயுட்காலத்தைநிறைவு செய்ததுடன், அதன் அணுக்கடிகாரமும் செயலிழந்ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது நேவிக் அமைப்பில் இருப்பிடம், வழிகாட்டுதல் மற்றும் நேரச் சேவைக்காக 3 செயற்கைக்கோள்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. ஆனால், தனித்துவமான இருப்பிடச் சேவைக்கு குறைந்தபட்சம் 4 செயற்கைக்கோள்கள் அவசியம். இருப்பினும், அமெரிக்காவின் GPS, ஐரோப்பாவின் Galileo, ரஷ்யாவின் GLONASS உள்ளிட்ட பிற உலகளாவிய வழிகாட்டி அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதால் பொதுமக்களின் அன்றாட பயன்பாடுகளில் பாதிப்பு இருக்காது என மத்திய அரசு விளக்கியுள்ளது. மேலும், NVS–03 ஏவுதலுக்கு தயாராக இருப்பதுடன், NVS–04 மற்றும் NVS–05செயற்கைக்கோள்களும் உருவாக்கத்தின் இறுதிக்கட்டத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டோல் வசூலில் புதிய உச்சம்... ரூ.70,278 கோடி!




சென்னை, ஆக. 01–

2025–26 நிதியாண்டில் இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக் கட்டண (டோல்) வசூல் 14.45% உயர்ந்து ரூ.70,278 கோடியாக புதிய சாதனையைப் படைத்துள்ளது. மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி இதைத் தெரிவித்தார். வசூலில் உத்தரப் பிரதேசம் முதலிடத்தை பிடித்துள்ளது. அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான், மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழ்நாடு இடம்பெற்றுள்ளன. இந்த ஐந்து மாநிலங்கள் மட்டும் மொத்த வசூலில் சுமார் 49% பங்கைக் கொண்டுள்ளன. ஃபாஸ்டேக் பயன்பாடு, தேசிய நெடுஞ்சாலைகள் விரிவாக்கம் மற்றும் தடையற்ற சுங்க வசூல் (MLFF) திட்டம் ஆகியவை வசூல் அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன. சாலைப் பயணிகளின் சுமையைக் குறைக்கும் வகையில் வருடாந்திர பாஸ் உள்ளிட்ட புதிய சலுகைகளையும் மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.




## மீன் சாப்பிடுபவர்களே கவனம்..!




மீன் உடலுக்கு தேவையான ஒமேகா–3 கொழுப்பு அமிலங்கள் மற்றும் புரதச்சத்துகளை வழங்கி இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சிறந்த உணவாக மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். இருப்பினும், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் அனைத்து வகை மீன்களையும் எச்சரிக்கையின்றி சாப்பிடக் கூடாது என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அதிக எண்ணெயில் பொரித்த மீன்களில் உள்ள டிரான்ஸ் கொழுப்புகள் ரத்த அழுத்தத்தை அதிகரிக்கக்கூடும். அதேபோல், கருவாடு, உப்பு மீன் போன்றவற்றில் சோடியம் அளவு அதிகமாக இருப்பதால் அவற்றை தவிர்ப்பது நல்லது. மேலும், கிங் மேக்கரல், சுறா, வாள்மீன், சூரை போன்ற சில கடல் மீன்களில் பாதரசம் அதிகமாக இருப்பதால் அவை இதயம் மற்றும் ரத்த நாளங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. டப்பா மீன்களில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு இரசாயனங்களும் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கக்கூடும். எனவே, புதிய நன்னீர் அல்லது குளத்து மீன்களை தேர்வு செய்து, குறைந்த எண்ணெயில் வறுத்தோ அல்லது குழம்பாக சமைத்தோ, வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே அளவோடு சாப்பிடுவது இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கும் என்று மருத்துவர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# மராட்டியத்தில் 4 மாடி கட்டிடம் இடிந்து விழுந்து 10 பேர் பலி!



மும்பை, ஆக. 01–

மராட்டியத்தில், தானே மாவட்டம் பிவண்டி பாலாஜி நகரில் ‘கோகினூர்’ என்ற 4 மாடி குடியிருப்பு கட்டிடம் உள்ளது. இதில் 48 வீடுகள் இருந்தன. கடந்த 2020–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த கட்டிடம் ஆபத்தான நிலையில் இருப்பதாக மாநகராட்சியால் கண்டறியப்பட்டது. எனினும் கட்டிடத்தில் பொதுமக்கள் வசித்து வந்தனர். கடந்த 5–ந் தேதி கட்டிடவாசிகளை காலி செய்ய மாநகராட்சி நோட்டீஸ் வழங்கியது. மேலும் கட்டிட குடிநீர் இணைப்பு, மின் வினியோகம் துண்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் திடீரென கட்டிடத்தின் தூணில் பயங்கர சத்தத்துடன் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதை அறிந்து பதறிய குடியிருப்புவாசிகள் பலர் அவசர அவசரமாக கட்டிடத்தைவிட்டு வெளியேறினர். பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டவர்கள் யார் கூறுவதையும் கேட்காமல் தொடர்ந்து பணியில் ஈடுபட்டதாக தெரிகிறது. இதேபோல சில குடும்பத்தினரும் வீடுகளில் இருந்து உள்ளனர்

இந்த நிலையில் இரவு 11.20 மணியளவில் கட்டிடத்தின் ஒரு பகுதி திடீரென பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது. கட்டிடத்தில் இருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரோடு புதைந்தனர். தகவல் அறிந்து போலீசார், தீயணைப்பு படையினர், தேசிய பேரிடர் மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். விடிய, விடிய நடந்த மீட்பு பணி நேற்று 2–வது நாளாக நடந்தது. இதில் 4 பேர் இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டனர்.

எனினும், இந்த சம்பவத்தில் 10 பேர் பலியானார்கள். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. மேலும் 3 பேர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எனவே அவர்களை தேடும் பணி நேற்று இரவு வரை நீடித்தது. இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தோப்பு வெங்கடாசலம் பதவியை பறித்த திமுக!



சென்னை, ஆக. 01–

முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலத்தின் பதவியை பறித்து திமுக பொதுச் செயலாளர் துரை முருகன் உத்தரவிட்டுள்ளார்.

இவர் ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் பதவியில் இருந்தார். கொங்கு மண்டலத்தில் அதிமுகவில் கொடி கட்டி பறந்தவர் தோப்பு வெங்கடாசலம். ஈரோடு மாவட்டத்தில் கட்சியை வலுப்படுத்த முக்கிய பங்காற்றியவர். இவர் பெருந்துறை சட்டசபை தொகுதியில் இருந்து எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அமைச்சரவையில் அமைச்சராக பணியாற்றியவர். இவர் 2021ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலின் போது தோப்பு வெங்கடாசலத்திற்கு தேர்தலில் போட்டியிட எடப்பாடி பழனிசாமி வாய்ப்பு வழங்கவில்லை. இதனால் அதிருப்தியில் இருந்த தோப்பு வெங்கடாசலம் அந்த தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இதையடுத்து 2021 ஆம் ஆண்டு திமுகவில் இணைந்தார். அப்போது அவருக்கு திமுகவின் ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் பதவி வழங்கப்பட்டது. மேலும் 2026 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் பெருந்துறை தொகுதியில் போட்டியிட்டார். ஆனால் அதிமுக வேட்பாளர் ஜெயக்குமாரிடம் தோப்பு வெங்கடாசலம் தோல்வி அடைந்தார். இந்த நிலையில் அவர் கடந்த சில நாட்களால் திமுகவின் எந்த நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளாமல் இருந்தார். இந்த நிலையில்தான் அவருடைய மாவட்ட பொறுப்பாளர் பதவி பறிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இதுகுறித்து துரைமுருகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஈரோடு மத்திய மாவட்டத்திற்குரிய சட்டமன்ற தொகுதிகளான பெருந்துறை தொகுதி ஈரோடு தெற்கு மாவட்டத்திலும், பவானி தொகுதி ஈரோடு வடக்கு மாவட்டத்திலும் இணைக்கப்பட்டு மாவட்ட கழகச் செயலாளர்கள் அந்தந்த நிர்வகிப்பார்கள் என தெரிவித்துள்ளார். இந்த நிலையில் தோப்பு வெங்கடாசலத்தின் பதவி பறிப்புக்கு என்ன காரணம் என்பதை பார்க்கலாம். தோப்பு வெங்கடாசலத்திற்கும் முன்னாள் அமைச்சர் முத்துசாமிக்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கு இருந்து வந்ததாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில் பெருந்துறையில் தோப்பு வெங்கடாசலம் தோல்விக்கு முத்துசாமியும் காரணம்என சொல்லப்பட்டது. இதனால் அதிருப்தியில் இருந்த தோப்பு, கட்சி பணிகளில் ஈடுபடாமல் இருந்து வந்தாராம்.

## வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி (TMB) வேலைவாய்ப்பு 2026!




தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி (Tamilnad Mercantile Bank – TMB) சார்பில் Relationship Manager மற்றும் Product Specialist (Trade Finance) பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

நிறுவனம்: தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி (TMB)
பணி வகை: நிரந்தர (Regular)
பணியிடங்கள்:
Relationship Manager
Product Specialist Trade Finance
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடங்கிய தேதி: 23.07.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 03.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tmb.bank.in/careers

குறிப்பு: கல்வித் தகுதி, வயது வரம்பு, அனுபவம் உள்ளிட்ட முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்த்து விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

# வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை குறைவு!



சென்னை, ஆக. 01–

மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.200 குறைந்து ரூ.2,906–க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட சமையில் சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமுமின்றி ரூ.957.50–க்கு விற்பனையாகிறது.

# மக்கள் தொகை கணக்கெடுப்பு: 33 கேள்விகள்... தவறான தகவலுக்கு ரூ.1,000 அபராதம்!




சென்னை, ஆக.01–

தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான வீடு வீடாக கள ஆய்வு இன்று (ஆக.1) தொடங்கி ஆக.30 வரைநடைபெறுகிறது. மாநிலம் முழுவதும் 1.15 லட்சம் கணக்காளர்கள், சென்னையில் மட்டும் 8,260 பணியாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கணக்கெடுப்பின்போது வீடு, குடும்ப உறுப்பினர்கள், குடிநீர், மின்சாரம், கழிப்பறை வசதி, சமூக விவரங்கள் உள்ளிட்ட 33 கேள்விகள் கேட்கப்படும். இந்தக் கேள்விகளுக்கு தவறான தகவல் வழங்கினால் ரூ.1,000 வரை அபராதம்விதிக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தமிழகம் வருகை!



சென்னை, ஆக. 01–

மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன். இவர் தமிழகம் வருகை தந்துள்ளார். சென்னை விமான நிலையம் வந்த நிர்மலா சீதாராமனுக்கு அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். திருவான்மியூரில் நாளை நடைபெறும் திருச்செந்தூர் தலபுராணம் என்ற புத்தக வெளியீட்டு விழாவில் நிர்மலா சீதாராமன் பங்கேற்க உள்ளார். இதனை தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளிலும் நிர்மலா சீதாராமன் பங்கேற்கிறார்.

# கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் எப்போது?



சென்னை, ஆக. 01–

சென்னை தலைமைச் செயலகத்தில் கூட்டுறவு துறை அமைச்சர் காந்திராஜிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:– த.வெ.க. அரசு அமைந்த பிறகு கூட்டுறவு சங்கங்களில் உள்ள போலி உறுப்பினர்கள், மறைந்த உறுப்பினர்களின் பெயர்களை கண்டறிந்து நீக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் விரைந்து முடிக்கப்பட்ட பிறகு இந்த மாதம் (ஆகஸ்டு) கூட்டுறவு சங்க தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. கூட்டுறவு சங்க தேர்தலை தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் தேர்தல் ஆணையம் வெளிப்படைத்தன்மையோடு நடத்த தயாராக உள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டு றவு சங்கம், வேளாண் கூட்டுறவு மற்றும் விற்பனை சங்கம், மாவட்ட மத் திய கூட்டுறவு வங்கி, கூட்டுறவு மொத்த விற்பனை சங்கம், வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. இந்த சங்கங்கள் மூலம் 2 லட்சம் பேர் தேர்வாகி பணியாற்றுவார் கள். இவ்வாறு அவர் கூறினார்.


# மாற்றுக் கட்சியினர் இணைப்பு விழா!



திருப்பூர்,ஆகஸ்ட் 01–

திருப்பூர் வீரபாண்டி பிரிவில் தனியார் கட்டிடத்தில் லட்சிய ஜனநாயக கட்சி திருப்பூர் தெற்கு மாவட்டம் மாற்றுக் கட்சியினர் இணைப்பு விழா தெற்கு மாவட்ட செயலாளர் க.இரா. செந்தில் வாண்டையார் தலைமையில் பல்வேறு கட்சிகளில் முக்கிய பொறுப்புகள் வகித்த மணிகண்டன் .அன்பு பாண்டி.பாண்டித்துரை. பழனிச்சாமி.உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோர் மாற்று கட்சியில் இருந்து விலகி லட்சிய ஜனநாயக கட்சியில் இணைந்து கொண்டார்கள் லஜக கட்சியின் மாநில முதன்மைச் செயலாளர் கண்ணன் முன்னிலை வகித்தார் மற்றும் நிர்வாகிகள் மாநில பொறுப்பாளர் காளிமுத்து. மாவட்டத் துணைச் செயலாளர் அருண். பொருளாளர். குமார் மற்றும் பல்லடம் சட்டமன்றத் தொகுதி செயலாளர் வேல்முருகன் திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர் மேலும் இந்த நிகழ்வில் உறுப்பினர் படிவம் வழங்கப்பட்டது தெற்கு மாவட்ட மகளிர் அணி செயலாளராக திருமதி தயாசாந்தி பொறுப்பேற்றுக் கொண்டார்....

# கேரள நிலச்சரிவு: 7 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட்!



திருவனந்தபுரம், ஆக. 01–

கேரளாவின் இடுக்கி மாவட்டம் அடூர்மலை பகுதியில் கனமழையால் இன்று அதிகாலை பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஒரு வீடு மண்ணில் புதைந்த நிலையில், பெண் ஒருவர் உயிரிழந்தார்; 2 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். மேலும்சிலர் சிக்கியிருக்கலாம் என்பதால் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தேசிய பேரிடர் மீட்புப் படை, போலீஸ் மற்றும் தீயணைப்புத் துறையினர் இணைந்து தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து கனமழை பெய்யும் நிலையில், இடுக்கி உள்ளிட்ட கேரளாவின் 7 மாவட்டங்களுக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் விடுத்துள்ளது.

# ஸ்பெயினில் அகதிகள் அலை... 60 ஆயிரம் பேர் நுழைவு; ராணுவம் குவிப்பு!



ஸ்பெயின், ஆக. 01–

மொரோக்கோ வழியாக 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க அகதிகள் ஸ்பெயினுக்குள் நுழைந்துள்ளதால், அந்நாட்டில் பதற்றம் நிலவுகிறது. பஞ்சம், உள்நாட்டுப் போர் உள்ளிட்ட காரணங்களால் ஆப்பிரிக்க மக்கள் சட்டவிரோதமாக ஐரோப்பாவை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

ஸ்பெயினின் சியூட்டா, மெலில்லா பகுதிகளில் அகதிகள் வருகை அதிகரித்துள்ள நிலையில், கடல் எல்லையில் ராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அகதிகளை தடுக்க முடியாது என ஸ்பெயின் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், மனிதாபிமான நெருக்கடி ஏற்படும் அபாயம் எழுந்துள்ளது. நிலைமையை ஆய்வு செய்ய பிரதமர் பெட்ரோ சான்செஸ் சியூட்டாவுக்கு நேரில் சென்றுள்ளார். கடல் வழி பயணங்களில் மற்றும் எல்லை நெரிசலில் பலர் உயிரிழந்துள்ளதும் கவலை அளித்துள்ளது.




திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு மின்னணு விளம்பர திரையை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.சரவணன் ஆகியோர் உள்ளனர்.

# பழனி டிஎஸ்பி நியமனம்!



பழனி, ஆக. 01–

திண்டுக்கல் மாவட்டம் பழனி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளராக தேவராஜ் நியமனம். இவர் தேனி மாவட்டத்தில் DCRB – DSP யாக பணிபுரிந்து வந்தார்.






# இன்றைய கார்ட்டூன்

## 16 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு!




வீடு வீடாக கணக்கெடுக்கும் பணிகள் இன்று முதல் 30-ஆம் தேதி வரை நடைபெறும்

# மேகதாது அணை விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தை நாடுவதுதான் ஒரே தீர்வு: அமைச்சர் நிர்மல் குமார்!

நெல்லை, ஆக. 01–

நெல்லையில் அமைச்சர் நிர்மல் குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:– நமக்கு இருக்கின்ற



ஒரே ஒரு வாய்ப்பு உச்ச நீதிமன்றம் தான்.. மத்திய நீர்வளத்துறை அமைச்சருக்கே இது பற்றி தெளிவு இல்லை. புரியவில்லை. தமிழகத்திற்கு விரோதி போல் பேசுகிறார். தமிழக அரசுக்கு எதிராக அவர் செயல்படுகிறார்.

கர்நாடகாவில் அணை கட்டுவதற்கு ஆதரவாக பேசுகிறார். மாநிலங்கள் இதில் எதுவும் செய்ய முடியாது. ஒன்றிய அரசு தான் இதில் செய்ய முடியும். கர்நாடகாவில் எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும், பாஜக இருந்தாலும், காங்கிரஸ் இருந்தாலும் தமிழகத்திற்கு தண்ணீர் கொடுக்க கூடாது என்பது தான் அவர்களுடைய நோக்கம். கர்நாடக விவகாரத்தில் தண்ணீர் பெற ஒரே ஒரு தீர்வாக உச்ச நீதிமன்றம் தான் உள்ளது. இதில் என்ன செய்ய முடியுமோ அதனை இந்த அரசு செய்யும்'' என்றார்.

அப்போது பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், காங்கிரஸ் ஆட்சி தான் கர்நாடகாவில் நடக்கிறது. ராகுல் காந்தி ஒரு வார்த்தை கூறினால் அவர் திறந்துவிட போகிறார். ஏன் ராகுல் காந்தி பேசவில்லை என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்த நிர்மல் குமார், இதே அன்புமணி தான் காங்கிரஸோடு கூட்டணியில் இருந்தார்.

அப்போது கெஜட்டில் நோட்டிபிகேஷன் வரும் போது என்ன செய்துகொண்டு இருந்தார்.. இப்போது இரு மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினை என்றால் உச்ச நீதிமன்றத்தை நாடுவது தான் ஒரே தீர்வு.. அனைத்துக் கட்சி கூட்டம் எப்போது விஜய் நடத்துவார் என்று கேட்கிறீர்கள். அனைத்து கட்சி கூட்டம் குறித்து முதல்வர் விஜய் முடிவெடுப்பார்''என்று கூறினார்.

# எழும்பூர் ரயில் நிலைய மறுசீரமைப்பு: ஆக.5 முதல் 20 வரை ரயில் சேவையில் முக்கிய மாற்றங்கள்!

சென்னை. ஆக. 01–

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் பயணிகள் வசதியை மேம்படுத்தும் வகையில் நடைபெற்று வரும் மறுசீரமைப்புப் பணிகள் காரணமாக, ஆகஸ்ட் 5 முதல் 20–ம் தேதி வரை பல முக்கிய எக்ஸ்பிரஸ் ரயில்களின் இயக்கத்தில் தற்காலிக மாற்றங்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.



பயணிகள் நெரிசலைக் குறைத்தல், கூடுதல் ரயில்களை இயக்குதல் மற்றும் நிலையத்தின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக, சென்னை எழும்பூருக்கு வந்து செல்லும் சில ரயில்கள் தாம்பரம் மற்றும் மாம்பலம் நிலையங்கள் வரை மட்டுமே இயக்கப்படும்.

அதன்படி, தஞ்சாவூர் சென்னை எழும்பூர் உழவன் எக்ஸ்பிரஸ், மங்களூரு சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ், கொல்லம் சென்னை அனந்தபுரி சூப்பர்பாஸ்ட், சேலம் சென்னை எக்ஸ்பிரஸ் ஆகியவை ஆகஸ்ட் 5 முதல் 19 வரை தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும். மேலும், திருச்சி சென்னை மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் மாம்பலம் வரை மட்டுமே இயக்கப்பட உள்ளது.

அதேபோல், சென்னை எழும்பூரில் இருந்து புறப்படும் உழவன் எக்ஸ்பிரஸ், மங்களூரு எக்ஸ்பிரஸ், அனந்தபுரி சூப்பர்பாஸ்ட் மற்றும் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட ரயில்கள், ஆகஸ்ட் 6 முதல் 20 வரை தாம்பரம் நிலையத்தில் இருந்து தற்காலிகமாக புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


மேலும், அகமதாபாத் திருச்சி வாராந்திர சிறப்பு ரயில்கள் குறிப்பிட்ட நாட்களில் ரேணிகுண்டா, திருத்தணி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு வழியாக மாற்றுப் பாதையில் இயக்கப்பட உள்ளதால், எழும்பூர், தாம்பரம், பெரம்பூர், அரக்கோணம் உள்ளிட்ட சில நிலையங்களில் நின்று செல்லாது.

இந்த மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, பயணிகள் தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு, NTES (National Train Enquiry System) செயலி அல்லது தெற்கு ரயில்வே அதிகாரப்பூர்வ தகவல் மூலம் ரயில்களின் இயக்க விவரங்களை உறுதி செய்து கொள்ளுமாறு ரயில்வே நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. மறுசீரமைப்புப் பணிகள் முடிந்த பின், சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் கூடுதல் வசதிகளுடன் சேவைகள் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காமன்வெல்த் ஈட்டி எறிதலில் முதல்முறையாக 2 பதக்கங்கள்..! நீரஜ் சோப்ரா வெள்ளி!

புதுடெல்லி, ஆக. 01–

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில், 23–ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஜூலை 23 முதல் நடைபெற்று வருகின்றன. இதில் இந்தியாவிலிருந்து 78 வீரர்கள், 48 வீராங்கனைகள் பங்கேற்றுள்ளார்கள்.




காமன்வெல்த் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா 85.83 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளி வென்றார். மற்றுமொரு இந்தியரான யஷ் வீர் சிங் 85.41 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து வெண்கலம் வென்றார்.

இலங்கை வீரர் ருமெஷ் தரங்கா பதிராகே 89.75 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து தங்கப் பதக்கம் வென்றார்.

காமன்வெல்த் போட்டியில் நீரஜ் சோப்ரா, யஷ் வீர் சிங் இரண்டு பதக்கங்களை வென்று வரலாறு படைத்துள்ளார்கள். காமன்வெல்த் ஈட்டி எறிதலில் முதல்முறையாக இரண்டு இந்தியர்கள் பதக்கம் வென்று புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள்.

இந்தியாவுக்கு 20ஆவது பதக்கத்தையும் மற்றுமொரு இந்தியர் 21ஆவது பதக்கத்தை வென்று கொடுத்துள்ளார். இதில் 5 தங்கம், 11 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.

# "ஆவின் பால் பாக்கெட் பிலிம்களில் ரசாயன நெடி... 160 ரோல்களை திருப்பி அனுப்பிய மதுரை ஆவின்!"

மதுரை, ஆக. 01–

மதுரை மாவட்டத்தில் ஆவின் பால் பாக்கெட்டுகளில் ரசாயன நெடி வீசியதால் 160 ரோல்களை ஒப்பந்த நிறுவனத்திற்கு ஆவின் நிர்வாகம் திருப்பி அனுப்பியது.




மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விநியோகிக்கப்பட்ட ஆவின் நீல நிறப் பால் பாக்கெட்டுகளில் கடந்த சில நாட்களாக பிளாஸ்டிக் மற்றும் குளோரின் போன்ற ரசாயன நெடி வீசியது.

இதையடுத்து பொதுமக்கள் மற்றும் நுகர்வோர்களிடமிருந்து பரவலான புகார்கள் எழுந்தன. குழந்தைகள் மற்றும் நோயாளிகள் தினமும் பயன்படுத்தும் பாலில் இத்தகைய நெடி வருவது பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

இந்தப் புகாரைத் தொடர்ந்து, உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் சாத்தமங்கலம் ஆவின் பால் பண்ணை மற்றும் பல்வேறு விநியோக மையங்களில் அதிரடி சோதனை நடத்தி பால் மாதிரிகளைச் சேகரித்து ஆய்வகத்திற்கு அனுப்பினர். முதற்கட்ட விசாரணையில், பால் பாக்கெட்டுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பாலித்தீன் பிலிம் பேப்பர் ரோல்களில் ஏற்பட்ட தரம் மற்றும் குறைபாடே இந்த ரசாயன நெடிக்குக் காரணம் என மதுரை ஆவின் நிர்வாகம் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தரமற்ற பிலிம்களை சப்ளை செய்த ஒப்பந்த நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டு ஆவின் நிர்வாகம் மற்றும் பால்வளத்துறை சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. மேலும், பண்ணையில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த ரசாயன நெடி கொண்ட 160 பாலித்தீன் பிலிம் ரோல்களை ஆவின் நிர்வாகம் உடனடியாக ஒப்பந்த நிறுவனத்திற்கே திருப்பி அனுப்பியது.

தற்போது அந்த தரமற்ற பிலிம்கள் பயன்பாட்டிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டு, தனியாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு பொதுமக்களுக்கான ஆவின் பால் விநியோகம் எவ்வித பாதிப்புமின்றி தடையின்றி வழங்கப்பட்டு வருவதாக ஆவின் நிர்வாகம் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

# காவல் நிலையத்தில் செந்தில் பாலாஜி நேரில்!



சென்னை, ஆக. 01–


டாஸ்மாக் நிறுவனத்தில் நடந்த முறைகேடு தொடர்பாக, செந்தில்பாலாஜி மீது புதிய வழக்கு ஒன்றை லஞ்சஒழிப்பு போலீசார் பதிவு செய்தனர்.

இதன் காரணமாக காவல்துறை யினர் கைது செய்வதற்கு வாய்ப்பிருப்பதால், கடந்த 2 நாட்களாக செந்தில் பாலாஜி காவல் நிலையத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்தார். செந்தில் பாலாஜிக்கு முன் ஜாமீன் வழங்கி சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டதையடுத்து அவர் இன்று காலை திருவல்லிக்கேனி காவல் நிலையத்தில் ஆஜரானார். அவருடன் அவரது சகோதரர் அசோக்குமாரும் கையெழுத்திட ஆஜராகி உள்ளார்.

# மேகமலையில் மிக கனமழை: சுருளி அருவியில் குளிக்க தடை!

உத்தமபாளையம், ஆக. 01–

தேனி மாவட்டம், கம்பம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள சுருளி அருவியில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க வனத் துறையினர் தடை விதித்தனர். விடுமுறை நாளான சனிக்கிழமை ஆவலுடன் நீராட வந்த சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.




மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள மேகமலை, மகாராஜாமெட்டு, இரவங்கலாறு, தூவானம், அரிசிப்பாறை, காப்புக்காடு ஆகிய வனப்பகுதிகளில் சனிக்கிழமை அதிகாலை முதல் மிக கனமழை பெய்து வருகிறது. இதனால் கடந்த 4 மாதங்களாக நீரின்றி வறண்ட சுருளி அருவிக்கு திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால், சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு கருதி அருவியில் சென்று குளிக்க சனிக்கிழமை தற்காலிகமாக வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

கடந்த 19–ஆம் தேதி முதல் அருவியில் குளிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு வனத் துறையினர் தடை விதித்தனர்.

தற்போது மேகமலை அதைச் சுற்றிய மேற்கு தொடர்ச்சி மலைகளில் தொடர் மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

உத்தமபாளையம் வட்டாரம் அதை சுற்றிய பகுதியில் பெய்த இந்த மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது தொடர்பாக அமைச்சர் கீர்த்தனா நேரில் ஆய்வு!

சிவகாசி, ஆக. 01–

தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:–

மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பதற்காக இரண்டு இடங்களை நேரில் ஆய்வு செய்தேன்.



1.பட்டாசு தொழிற்சாலைகள் அதிகம் உள்ள பகுதியின் அபாய நிலை

2. மக்கள் அடர்த்தி மற்றும் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, மிகவும் பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்ய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பது எனது முதன்மை பொறுப்பு. அதனை உறுதிப்படுத்தும் வகையில், புதிய தீயணைப்பு நிலையம் விரைவில் அமைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை வெறும் வார்த்தைகளாக அல்லாமல், செயலாக்கமாக மாற்றுவதே எங்கள் அரசின் நோக்கம். மக்கள் நலனும், பாதுகாப்பும் எப்போதும் எங்கள் முன்னுரிமையாக இருக்கும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சினிமா துளிகள்..!

## 'டாக்ஸிக்' டிரெய்லர் ரிலீஸ்.. உற்சாகத்தில் ரசிகர்கள்!




'கே.ஜி.எப்' படங்களின் வெற்றிக்குப் பிறகு நடிகர் யாஷ் நடித்துள்ள 'டாக்ஸிக்' திரைப்படத்தை இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கியுள்ளார். கேவிஎன் புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ள இந்த கேங்ஸ்டர் டிராமா படத்தில் நயன்தாரா, கியாரா அத்வானி, ருக்மணி வசந்த், ஹூமா குரேஷி, தாரா சுதாரியா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். அண்மையில் வெளியான 'லேடீஸ் அண்ட் லேடீஸ்' அறிமுக வீடியோ ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

1940 முதல் 1970–ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் கோவாவில் நடைபெற்ற போதைப்பொருள் கடத்தல் மற்றும் மாபியா கும்பல்களின் பின்னணியை மையமாகக் கொண்டு இந்த ஆக்ஷன் திரில்லர் திரைப்படம் உருவாகியுள்ளது.

சமீபத்தில் வெளியான 'டாக்ஸிக்' டீசர் சமூக வலைதளங்களில் வைரலானது. அதே நேரத்தில், அதில் இடம்பெற்ற சில காட்சிகள் குறித்து சமூக வலைதளங்களில் விமர்சனங்களும் எழுந்தன. குறிப்பாக, சில காட்சிகள் சர்ச்சையை ஏற்படுத்தியதால் டீசர் பரபரப்பாக பேசப்பட்டது.

முதலில் மார்ச் 19–ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த இப்படத்தின் வெளியீடு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது வரும் ஆகஸ்ட் 26–ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், 'டாக்ஸிக்' திரைப்படத்தின் டிரெய்லர் வரும் ஆகஸ்ட் 8–ம் தேதி வெளியாகும் என்று படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதையடுத்து, யாஷின் மிரட்டலான டிரெய்லரை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

## நடிகை ஊர்வசியின் மகள் தேஜாலக்ஷ்மி ஹீரோயினாக அறிமுகம்!



நடிகை ஊர்வசியின் மகள் தேஜாலக்ஷ்மி ஊர்வசி நாயர் கன்னட திரையுலகில் ஹீரோயினாக அறிமுகமாகிறார்.

தமிழ், மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை ஊர்வசி. இவரது மகள் தேஜாலக்ஷ்மி ஊர்வசி நாயர், தற்போது கன்னட திரையுலகில் ஹீரோயினாக அறிமுகமாகிறார். அவர், நடிகர் புவன் பொன்னண்ணாவுக்கு ஜோடியாக 'புல்லி' என்ற படத்தில் நடிக்கிறார்.

இப்படத்தின் மூலம் நடிகை ஊர்வசி சுமார் 8 ஆண்டுகளுக்குப் பிறகு கன்னட திரையுலகில் மீண்டும் நடிக்கிறார். மேலும், தாயும் மகளும் இணைந்து ஒரே கன்னட படத்தில் முதன்முறையாக திரை பகிர்ந்து கொள்வதும் இந்தப் படத்தின் சிறப்பம்சமாகும். இதில் ஊர்வசி, புவன் பொன்னண்ணாவின் தாயாக முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். அனுப் ஆண்டனி இயக்கும் 'புல்லி' திரைப்படம் டார்க் காமெடி கதைக்களத்தில் உருவாகி வருகிறது. தாய்–மகன் உறவை மையமாகக் கொண்ட இந்தப் படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. படத்தில் அச்சுத் குமார், ஓம் பிரகாஷ் ராவ் உள்ளிட்ட பலரும் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த ஜேசன் சஞ்சய்!



நடிகராக இருந்து தற்போது தமிழ்நாட்டின் முதல்வராக மாறியிருக்கிறார் ச. ஜோசப் விஜய். இவருக்கு ஜேசன் சஞ்சய் என்ற மகனும் திவ்யா என்ற மகளும் இருக்கிறார்கள். இதில் ஜேசன் சஞ்சய் இயக்குநராக சிக்மா என்ற படத்தின் மூலம் அறிமுகமாகிறார். சிக்மா படத்தில் நடிகர் சந்தீப் கிஷன் நாயகனாக நடிக்கிறார். லைகா நிறுவனத் தயாரிப்பில் உருவாகும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து வெளியீட்டுக்குத் தயாராகி வருகிறது. இந்த நிலையில், நேர்காணல் ஒன்றில் பேசியபோது தொகுப்பாளினி டிடி உடன் ஜேசன் சஞ்சய் பேசினார். அதில் அவரிடம், "ஹாலிவுட் நடிகர் ஜேசன் உடன் தமிழ்நாட்டு ஹீரோவை யாரை நடிக்க வைக்கலாம்?'' எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜேசன் சஞ்சய், "என்னுடைய முதல் தேர்வு அப்பாதான். காம்பினேஷன் நன்றாக இருக்கும்'' என்றார். சமீபத்தில் அவருக்கும் அவரது தந்தையான விஜய்க்கும் சண்டை என்பதுபோல் பலர் புரளியைக் கிளப்பி வந்தார்கள். இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இந்தப் பேட்டி அமைந்துள்ளதாக சமூக வலைதளத்தில் விஜய் ஆதரவாளர்களால் பகிரப்பட்டு வருகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020